# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

முறையீட்டு மனு எண். **093/ந/2018**

ஆணை எண். **115/2018**

நாள் : **03/05/2018**

**திரு எம். எஸ். முகமது சாலிக்,**
**சென்னை**

– **முறையீட்டு மனுதாரர்**

**நகராட்சி ஆணையாளர்,**
**காயல்பட்டணம் நகராட்சி,**
**காயல்பட்டணம்.**

– **எதிர் மனுதாரர்**

சென்னை, முத்துமாரித் தெரு, எண்.86 (பழைய கதவு எண்.37,) முகவரியில் வசிக்கும் திரு எம்.எஸ் முகமது சாலிக் அவர்களின் 26.03.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 093/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டு, கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சென்னை, முத்துமாரித் தெரு, எண்.86 (பழைய கதவு எண்.37,) முகவரியில் வசிக்கும் திரு எம்.எஸ் முகமது சாலிக் என்பவர், 14.12.2012 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.113–இல் அறிவிக்கை செய்யப்பட்ட, 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (பொதுக் கட்டடங்களில் நெருங்கச் சுழலும் தொலைக்காட்சி சாதனங்கள் நிறுவுதல்) விதிகளை முறையாகச் செயல்படுத்தத் தவறிய காயல்பட்டணம் நகராட்சி ஆணையர் மீது நடவடிக்கை எடுக்கும்பொருட்டு கீழ்க்காணும் நிகழ்வுகளைக் குறிப்பிட்டு முறையீடு செய்துள்ளார் :-

(1) மேற்குறிப்பிட்ட விதிகள் வெளியிடப்பட்டு 5 ஆண்டுகளுக்கு மேலாகியும், அவ்விதிகளை முழுமையாக செயல்படுத்தப் படவேண்டிய நிலையில் காயல்பட்டணம் நகராட்சி இருப்பது ;

(2) காயல்பட்டணம் பேருந்து நிலையம், பீச்பார்க் பகுதிகள் உட்பட பல பொதுப் பயன்பாட்டுக் கட்டடங்களில் நெருங்கச் சுழலும் தொலைக்காட்சி சாதனங்கள் நிறுவப்படாமல் இருப்பது. அதனால் கொலை போன்ற குற்றச் செயல்கள் நடைபெற்றது ;

(3) காவல் துறை மற்றும் சில அரசு சாரா நிறுவனங்கள் முறையீடு செய்தும் கடந்த 5 ஆண்டு காலமாக மேற்குறிப்பிட்ட விதிகளை செயல்படுத்தத் தவறியது.

2. 14.12.2012 நாளிட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண்.113–இல் அறிவிக்கை செய்யப்பட்ட தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் (நெருங்கச் சுழலும் தொலைக்காட்சி சாதனங்கள் நிறுவதல்) விதிகளில் பொதுக்கட்டடங்கள் என்ற வரையறையில் 18 வகையானக் கட்டடங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. மேற்குறிப்பிட்ட சாதனங்களை நிறுவுவதற்கு பொதுக் கட்டடங்களின் உரிமையாளர் அல்லது அக்கட்டடத்தைப் பயன்படுத்தும் நபர்கள் மேற்கொள்ளப்படவேண்டிய வழிமுறைகள் குறித்தும் விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், புதிதாகக் கட்டப்படவுள்ள கட்டடங்களுக்கு, கட்டட வரைபட அனுமதி வழங்கும் வரைபடத்தில் மேற்குறிப்பிட்ட சாதனம் பொருத்துவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளதா என்பதை நகராட்சி ஆணையர் உறுதி செய்து கொள்ளவேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட விதிகளைப் பின்பற்றி நெருங்கச் சுழலும் தொலைக்காட்சி சாதனங்கள் பொருத்தப்படாத பொதுக்கட்டடங்களில் செயல்படும் தொழில் மற்றும் வணிகம் சம்பந்தமாக கீழ்க்காணும் முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> "If the Closed Circuit Television units are not installed within such time limit, the regular type Trade or Business License issued by the competent authority under the relevant statuses to the owner or occupier of that building may, at any time, be cancelled or suspended.

3. 2012–ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் (நெருங்கச் சுழலும் தொலைக்காட்சி சாதனங்கள் நிறுவதல்) விதிகள் நடைமுறைக்கு வந்து 63 திங்கள்களுக்கு மேலாகின்றன. எனினும், முறையீட்டு மனுதாரர் மிகவும் காலம் கடந்தே இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். சமூக ஆர்வலரான முறையீட்டு மனுதாரர் மேற்குறிப்பிட்ட விதிகள் காயல்பட்டணம் நகராட்சியில் நடைமுறைப்படுத்தாதது குறித்து சம்பந்தப்பட்ட மண்டல நகராட்சிகளின் இயக்குநருக்கோ அல்லது நகராட்சி நிர்வாக ஆணையருக்கோ முறையீடு செய்ததாகத் தெரியவில்லை. 2015–ஆம் ஆண்டில் காயல்பட்டணம் பேருந்து நிலையத்தில் கொலை சம்பவம் ஒன்று நிகழ்ந்துள்ளதுடன் பீச், பார்க் பகுதியில் சில சமூகக் குற்றச் செயல்களும் நடைபெறுகின்றன என முறையீட்டு மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட குற்றச் செயல்கள் நடைபெற்றதைக் கண்டறிந்து முறையீட்டு மனுதாரரும் மற்ற பொதுநல ஆர்வலர்களும், மேற்குறிப்பிட்ட சாதனங்கள் பொருத்தப்படுவதின் அவசியத்தை சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு வலியுறுத்தத் தவறியுள்ளனர். மேற்கண்ட விதிகள் நடைமுறைக்கு வந்தபின், பொதுநல ஆர்வலர்கள் அனைவருமே கடந்த நான்கைந்து ஆண்டுகளாக மௌன நிலையிலேயே இருந்துள்ளனர். தற்போதைய நிலையிலும் நெருங்கச் சுழலும் கண்காணிப்பு சாதனங்கள் பொருத்தப்படாத கட்டடங்கள் மற்றும் அதன் உரிமையாளர்கள், கட்டடங்கள் பொதுப்பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்ட நாள் மற்றும் அக்கட்டடங்களுக்கு வருகை தரும் மக்களின் எண்ணிக்கை போன்ற விவரங்களை சமர்ப்பிக்கவும் மனுதாரர் தவறியுள்ளார். மேற்குறிப்பிட்ட விதிகளில் 2 (2) (6) –இன் கீழ்

"The Commissioner or the Executive Authority of the urban local body shall ensure that the Closed Circuit Television units have been installed in such buildings in the manner as prescribed in sub-rules (2) and (3)."

எனவே, பொதுக்கட்டடங்களில் நெருங்கச் சுழலும் கண்காணிப்பு தொலைக்காட்சி சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளனவா என்பதை நகராட்சி ஆணையரால் உறுதி செய்து கொள்ள மட்டுமே இயலும், அச்சாதனங்கள் பொருத்தப்படாத பொதுக்கட்டடங்களில் செயல்படும் வணிகம் (ம) தொழில் சம்பந்தப்பட்ட உரிமங்களை இரத்து செய்யும் அதிகாரம் ஆணையருக்கு இருப்பதாகத் தெரியவில்லை. எனவே, மேற்குறிப்பிட்ட விதிகளில் பொதுக்கட்டடங்கள் என வரையறை செய்யப்பட்டக் கட்டடங்களில் நெருங்கிச் சுழலும் கண்காணிப்புத் தொலைக்காட்சி சாதனம் பொருத்தப்படாத கட்டடங்களைக் கண்டறிந்து, அக்குறைபாடு குறித்து அக்கட்டடங்களில் தொழில் மற்றும் வணிகம் மேற்கொள்வதற்கு உரிமம் வழங்கிய அலுவலர்களுக்கு தெரிவிக்குமாறு காயல்பட்டணம் நகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தப்படுகிறது.

2018 – ஆம் ஆண்டு, மே திங்கள், 17 – ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. நகராட்சி ஆணையாளர்,
காயல்பட்டணம் நகராட்சி,
காயல்பட்டணம்,
தூத்துக்குடி மாவட்டம்.

2. திரு எம். எஸ். முகமது சாலிக்,
எண்.86 (பழைய எண்.37),
முத்துமாரி செட்டித் தெரு,
சென்னை – 600 001.

3. நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநர்,
நகராட்சிகளின் நிர்வாக மண்டல இயக்குநரகம்,
திருநெல்வேலி.

4. நகராட்சி நிர்வாக ஆணையர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி